134

எந்நூலுக்கும் இந்நூலே மூலம்

"கடவுள்"

R
N49
113110

உலக சமாதான ஆலய ஸ்தாபகரும்
பரிபூரண பரஞ்சோதியின் உயர்ஞான
சபையின் தலைவருமான
"ஞான வள்ளல் பரஞ்சோதி மகான்"

எந்நூலுக்கும் இந்நூலே மூலம்.

கடவுள்

உலக சமாதான ஆலய ஸ்தாபகர்

ஞானவள்ளல் பரஞ்சோதி மகான்

அருளியது.

பரிபூரண பரஞ்சோதியின் உயர்ஞான சபையோரால்

வெளியிடப்பட்டது.

உரிமைப் பதிப்பு (Regd Act-XXI of 1860)

(Copy Right Reserved)

ஞானவள்ளல் பரஞ்சோதி மகான் அருளிய 'எந்நூலுக்கும் இந்நூலே மூலம்' என்னும் கீழ்கண்ட புத்தகங்கள் இதன் 18, 19, 20 பக்கத்திலுள்ள விலாசங்களிலும், சுதேசமித்ரன் ஹிக்கின்பாதம்ஸ் புத்தக ஸ்டால்களிலும் கிடைக்கும்.

1. 'நான்' —தமிழ், ஆங்கிலம்
2. 'கடவுள்' — தமிழ்
3. உணர்வும் தவக்கனலும் ,,
4. பரஞ்சோதி ஞானக்கண் ,,
5. ஆருதாரமும் அமிர்தமும் ,,
6. ஒருமொழியும் ஆதியும் உலக இணைப்பும் ,,
7. பூதலோகம் ,,
8. பேரறிவு ,,
9. ஒருமொழி, பரஞ்சோதி ஞானக்கண் —தெலுங்கு

Printed at the Rajan Electric Press, Madras—1.

கடவுள்

கடவுளைத் தவிர்த்து வேறொரு பொருள் இல்லாததால், வேறொரு பொருள் ஒன்று இருந்து அதை எடுத்து கடவுள் எல்லாவற்றையும் படைத்தான் என்பதில்லை. எல்லாமாகப் பரிணமித்திருப்பதே கடவுள்.

உலக தத்துவம்.

எங்கும் பூரணமான இருட்டில் ஒன்றுமில்லாது ஓர் அணுவாயிருந்த கடவுள் என்ற ஆதி நான் என்ற துணிகரமாகி, வியாபகத்தில் நினைப்பாகி, வேகத்தில் சப்தமாகி, உருவத்தில் நெருப்பாகி, என்றென்றைக்கும் குறைந்திடாப் பெருக்கம் கொண்ட, அந் நெருப்பின் பொறிகளே அணுக்களாகி, எங்கும் நிறைந்த இருட்டில் அவ்வணுக்களே வேகமாகப் பரவி அவ்வேகம் குறைந்ததும், அங்கங்கு அவ்வணுக்களின் இயல்பால் ஒன்று சேர்ந்து, அச்சேர்க்கையால் சுழலுதல், விலகுதல், உருளுதல், புரளுதல், அடங்கிய ஆகர்ஷண சக்தியுள்ள நட்சத்திர, உலக, பூமிகளாகி, அணுக்களே அணுக்களுக்கு வாகனமும் உணவுமாகி, அதனால் ஜீவனின் வளர்தல், நகர்தல், நடை, ஓட்டம் யாவுமாகி, தாவரம் மற்ற உருவங்கள் உட்பட, ஸ்பரிசமும், தோற்றமும் உள்ள ஜீவராசிகளாகி, மனிதர்களாகி, பேசுவதிலும் யூகிப்பதிலும் காரண சரீரமாகிய அறிவாகி, சுவை, நோவு, இன்பம், இவைகளில் சூக்குமமாகி அம்மனிதர்களில் அநேக காரண காரியங்களால் அறிவு உயர்வாகி, அதனால்

பக்தி, யோக ஆராய்ச்சிகளாகி, முடிவில் தன்னைத் தான் அறிந்து இவைகள் யாவும் தன் பரிணும வேக விளை வாகவே இருப்பதை விளக்கமாக அறிந்து கொள்வதே ஞானமாகும். இதுவே உலகங்களின் தத்துவம்.

எப்பொருளையும் எடுத்து, ஆராய்ந்தீர்களானல், இருள் துணிவு—வியாபகம்—சப்தம்—வெளிச்சம்—அணுக்கள் இவையாவும் பிரிக்க முடியாது ஒன்று சேர்ந்து இருப்பதை அறியலாம். இதை அறியாதபோது கடவுள் ஒருவன் தனியாக இருக்கிறன் என்று தேடவும் சொல்லவும் வேண்டியதாய் இருந்தது.

வெகுகாலயுகங்களாய் ஆராய்ந்ததின் முடிவு:ஸ்தூல சூக்கும காரண சரீரங்களின் உண்மை

ஸ்தூல சரீரங்கள் ஏற்படுவதற்கு முன் எவ்வுருவங்களுக்கும் சூக்கும சரீரமோ, காரண சரீரமோ யில்லை. உருவங்கள் ஏற்பட்ட பின் ஒன்றுக் கொன்று எதிர்ப்பட்டு ஏற்படும் பார்வைகளினுலும் ஒன்றேடொன்று ஐக்கியப் படுவதினுலும் அதனல் ஏற்படும் அனுபோகத் திறமைக்குத் தக்கவாறு ஒரு உருவத்திற்கு மறு உருவங்கள் மேலாகவும் சீர்திருத்தமாகவும் உண்டாகுவதும் உண்டாகவும் உண்டாக்கவும் யூகிப்பதுமாகும்.

உருவங்கள் ஏற்படுவதற்கு முன் தனி அணுமயத்தைத் தவிர எந்த ரூபமும் காரண சரீரமாகவும் சூக்கும சரீரமாகவும் ஆவதில்லை.

உதாரணம்:—அக்கினியிலிருந்து (5) அணுக்களாகப் பிரிந்து வருவதற்கு முன்னதாகவே ஏற்படப் போகும் உருவங்களைப் போல ரூபங்களாயிருந்து அந்த உருவங்களின் செயல்களால் உள்ள அனுபோகப் பதிவுகளால் அறிவு ஏற்பட்டிருந்து அந்த அணுக்கள் வருவதுமில்லை

ஆதலால் காரணம் (9) என்ற அறிவும், அதன் பிரதிபலிப்பான சூக்குமமும் (11) ஏற்பட இடமில்லை. அவன் எழுந்தான், ஓடினான், அமர்ந்தான், தூங்கினான் என்பது போல அணுக்களின் சேர்க்கையால் உள்ள உருவத்தில் ஏற்படும் செயல்களுக்குத் தக்கபடி துணிவு, சப்தம், வெப்பம், வெளிச்சம், கானல், நீர், மண், காற்று, ஸ்தூலம், சூக்குமம், காரணம், என்றும், மூக்கு, காது, கண், யூகம், புலன் கூடுதலுக்குத் தக்கவாறு ஓரறிவு, ஈரறிவு, ஐயறிவு, ஆறறிவு என்றும் எவ்வகையிலும் சரீர பரிசம் சுகமாய் இருப்பது இன்பம் என்றும், பரிசங்களுக்கு ஏற்படும் தடைகளால் உள்ள நோவு கவலைக்குத் துன்பம் என்றும், எல்லா நிர்வாகங்களும் யாதொரு தடையில்லாமல் விபரமாக நடக்க வேண்டிய குறிப்புக்காக, பாஷை எழுத்து, படிப்பு, உத்தியோகம், பதவி, கிழமை, வாரம், மாதம், வருஷம்; கிழக்கு, மேற்கு, திசைகளாகவும் தொழில் உருவங்களுக்கு ஏற்ற பெயர்களும், எளிய மக்கள் வாரத்திற்கு, மாதத்திற்கு, வருஷத்திற்கு ஒரு முறையாவது அவர்கள் வசிக்கும் இடங்களையும் சுத்தம் செய்து, நல்ல உணவு, உடை—உண்டு, உடுத்தி சந்தோஷங் கொண்டாட விடுமுறை நாள் என்றும், அனுபோக அறிவு நிறைவுக்குத் தக்கவாறு குணம், மனது, புத்தி, ஆராய்ச்சி, அறிவு, பேரறிவு என்றும், உருவத்தில் அனுபோக அறிவு பயன்படக் கூடிய திறமைக்குத் தக்கவாறு ஜீவன், ஜீவாத்மா, பரமஜீவாத்மா என்றும் பெயர்கள் ஏற்பட்டது.

உதாரணம் :—மழை பெய்த குளிர்ச்சியால் சுகம் அல்லது ஜுரம் ஏற்பட்ட தென்பதில் மழை ஸ்தூலம்: குளிர்ச்சி சூக்குமம்: சுகம் அல்லது ஜுரம் காரணமுமாகும்.

உணவு உயர்வு விரும்பேன்
உயர் உடை விரும்பேன்
உடல் சுகம் விரும்பேன்
உலக புகழ் விரும்பேன்

நீ யார் என்றறிய விரும்பிய
ஊக்கத்தால் தன்னிலே அறிந்தவன் யான்;

அறிவின் கூர்மையினுல் க்ஷணத்தில் தன்னிலே ஞானம் அடையலாம் பேரின்ப சுகம் தன் குண்டலினியால் இன்பிக்கலாம்.

பேய், தேவர்களின் தோற்றம்

சரீரங்களின் பக்குவத் திறமைக்குத் தக்கவாறு புலன்கள் உண்டாகி கடைசியாக மனித சரீரங்களாகி வெகு காலத்திற்குப் பின் அம்மனிதருக்கு வேண்டிய அனுபோகத்திற்கு உணவு உடை தொழில் சுகாதார இடவசதி இவைகள் கிடைக்காத துன்பத்தால் வருந்திய எண்ணத்தின் ஏக்கவலிவு உடையோர்கள் இறந்த பின் வான வெடிகள் வெடித்து பின்னர் அவைகளின் புகை சிறிது நேரம் இருந்து மறைவது போல் அவர்கள் எண்ணத்தின் ஏக்க பிரதி பலிப்பது சூக்கும வடிவு பெறுகிறது. அது நீலநிறம் போன்ற மிக சிறிய நிழலைப் போல் லிங்க சரீரமாக அல்லது பேய் (13) உடலாக விலகி நிற்பதுவும் அறிவு விளக்கம் உடையோர் இறந்த பின் அவர்களது எண்ணத்தின் பிரதி பலிப்பு சிறு வெண்மையான சூக்கும சரீரமாகவும் விலகி நின்று, இவைகளும் சில நாள் வரை இருந்து பின் அணுமயமாகி விடுகின்றது. ஆகையால் இவற்றின் உண்மை நிலை நன்ருக அறிவுக்கு விளங்காத போது பிராணயாம அப்பியாசத்தால் உந்தியிலிருந்து நெற்றி வரையுள்ள ஆருதாரத்தில் படிப்படியாய் சக்கரங்களும் மலர்களும் வர்ணங்களும் தம் அறிவின் நம்பிக்கையில் மனக் கண்ணுக்கு புலப்பட்ட போதிலும், அதை நன்ருய் கவனித்து ஆராய்ந்தபோது தன் விசுவாச எண்ணத்தின் வலுவால் அது தோன்றியதே தவிர்த்து அங்கு ஒன்றும் இல்லை என்று, அறிவுக்கு விளங்குவது போல், பக்தியோக தவங்களின் ஆராய்ச்சியின் முயற்சியில் சூக்கும சரீரங்களாக நம் சிலருக்கு அறிவுக்குப் புலப்பட்ட போது

அவற்றை தேவர்களென்றும், பேய்களென்றும் காரண சூக்கும சரீரங்கள் ஏற்பட்டதின் பின் ஸ்தூல சரீரங்கள் ஏற்படுவதாகவும் சொல்ல வேண்டியிருந்தது. எதையும் பல தடவைகள் அனுபவித்து அதை அடிக்கடி ஆராய்ந்து வந்தபோது அதன் முடிவு அல்லது உண்மை தெளிவாக விளங்குகிறது. உணர்வின் இன்பத்தால் அல்லது குண்டலியின் (93) தவத்தின் பேரின்பத்தோடு 11 வருஷம் ஆராய்ந்த முடிவு இது.

காட்டை விட்டேன், வீட்டைவிட்டேன்
என் பெயரையும் விட்டேவிட்டேன்
ஊரை விட்டேன் உற்றார் உறவினரை விட்டேன்
என் சமயத்தையும் விட்டேவிட்டேன்
பெறுவதும் விட்டேன் பிறப்பதும் விட்டேன்
நான் பிணமாவதும் விட்டேவிட்டேன்
என் இஷ்டப்படி இருப்பேன் என் அம்பலத்தில் அமர்ந்ததால்
என் விருப்பத்தில் நான் இரண்டறக் கலப்பேன்.

பிறவி, மறு பிறவி; சொர்க்கம், நரகம் இவைகளைப் பற்றிய உண்மைகள்

ஸ்தூல சூக்கும காரண சரீரங்களின் உண்மையையும் பேய், தேவர்கள் தோற்றத்தின் உண்மையையும் அனுபவித்து ஆராய்ந்த முடிவில் தெரியும் உண்மை என்னவென்றால் அணுக்கள் கூடி உருவாகுமுன்னும் உருவாகி பிரிந்த பின்னும் அணுக்களின் அம்சம் வெட்டவெளியாகவே இருக்கிறது. அவ்வணுமய வெட்டவெளியில் உலகில் உருவாகுமுன் இன்னென்ன உருவாகி இன்னென்ன நிருவாகம் நடத்த வேண்டுமென்ற எண்ணமுமதிலிருப்பதில்லை. உருவாகி அவ்வுரு பிரிந்தபின் அல்லது அழிந்த பின்னும் இன்ன உருவத்திலிருந்து இன்னென்ன செயலிலிருந்தோமென்ற எண்ணமுமங்கிருப்பதில்லை.

பெய்யுமழை பூமியில் விழுமுன் எவ்வித மாற்றமுமில்லை பூமியில் பட்டபின் அங்கங்கு சேரும் தன்மைக்குத் தக்க நிறம், நாற்றம், மணம், சுவை அநேக விதங்களாக மாறுகிறது. அது பின் வெப்பாகி ஆவியாகி மேகமாகி பின் பெய்யும் மழையில் முன்னுள்ள நிறம், நாற்றம், மணம் சுவையாகப் பெய்வது இல்லை. அதுபோல் எந்த உயிரும் இறந்தபின் மறுசரீரம் எடுப்பதே இல்லை. ஒரு மரத்தின் வித்துக்களால் அநேக மரங்கள் உண்டாவதைப் போல், மனிதன் இறக்குமுன் அவன் விந்துவால் பல குழந்தைகள் உண்டாகின்றன: ஒரு மனிதன் உயிருள்ளபோது அவனது செயலும் எண்ணமும் நல்லதாயிருந்தால் அவன் தன் சரீர நலத்திற்குபயன்படுவதோடல்லாமல் அவன் ஒருவனல் பல மக்களும் நற்செயல் நல்லெண்ணத்தின் உணர்ச்சி தரக்கூடிய பயன் ஏற்படுகிறது. இதை தவிர்த்து உயிருள்ளபோது செய்த செயல்களுக்காகவும் அவன் எண்ணிய எண்ணங்களுக்காகவும் மறு பிறவி உலகில் எடுத்து நன்மை தீமைகளுக்கு ஏற்ப கஷ்டங்களோ, சுகங்களோ அனுபவிப்பது என்பதேயில்லை.

உதாரணம்:- அப்படி இல்லாததால் வியாச்சிய கோர்ட்டுகளும் (33) வேதாந்த விசாரணை ஸ்தாபனங்களும் வைத்திய சாலைகளும், பக்தியோக ஆலயங்களும் இருப்பதோடு யுத்தத்தில் சேர்ந்த ஒருவன் குடி விபசாரத்தோடு அநேகரை செய்ய ஒண்ணாத அட்டூழியங்களைச் செய்து வெகு பேர்களைக் கொலை செய்தோனை பெரும் வீரன் என்ற பட்ட பதவி சூட்டி வெகுமதி அளிப்பதும் சாதாரணமாக ஒருவன் ஏதோ காரணத்தால் கொலை செய்துவிட்டால் அவனை கொலைகாரப்பாவி, பாதகன், பெரும் துரோகி என்பதோடு தூக்கு தண்டனை இவைகள் ஏற்பட காரணமே யில்லை.

இவ்வுலகில் மறு பிறவி எடுக்காது அவன் உலகில் செய்த நன்மைகளுக்காக சொர்க்க லோகத்தில் சுகமான

விமோசனத்தில் இருப்பதுமில்லை. அவன் செய்த தீமைகளுக்காக நரக லோகத்தில் துன்பப்படுவது மில்லை.

செயல் எண்ணங்களிலும் பாகுபாடு உள்ள மனிதர்களுக்கு மோட்சம் உண்டு என்று நம்பினால் எவ்வித எண்ணத்தின் வலுவு இல்லாது உழைப்பு, உணவு, தூக்கம் போகம் காலக் கிரமப்படி இயற்கையாக வாழும் பறவை மற்ற ஜீவராசிகளுக்கு நம்மை விட உயர்வான மோட்சத்தில் அவைகள் தங்க வேண்டும். ஆகையால் மோட்சம் (64) நரகம் என்பது தனியாக இல்லை.

மோசமும் மோட்சமும் ஒன்றே
கருவும் குருவும் ஒன்றே
ஆதியும் மனிதனும் ஒன்றே
அறிவின் பெருக்கத்தில் நீங்களும் நானும் ஒன்றே.

தூக்கத்தில் கண்ட கனவையும் எழுந்து ஆராய்ந்து அறிய ஸ்தூலம் வேண்டியிருக்கிறது. ஆகையால் ஸ்தூல லோகத்துக் கப்பால் இருக்கும் அணுமயத்தில் பரலோகத் தீர்ப்பு நாள் என்பதே இல்லை.

பறக்கும் விமானமும் ஸ்தூலமும் இருந்தால்தான் சுகமாய்ப் பறந்து வந்தேன் என்று ஒருவன் சொல்ல முடியும். அதுபோல் துக்கம், இன்பம், தீர்ப்பு என்பவை செயலிலுள்ள விஷயங்கள். செயலுக்கு அணுக்களின் சேர்க்கையுள்ள சரீரமும், சரீர லோகமும் இருந்தாலே முடியும். அவ்வாறில்லாமல் சரீர லோகத்திற்கப்பால் யாவும் அணுமயமாகி விடுவதால் அணுமயத்தில் செயலில் அல்லது ஸ்தூலத்திலுள்ள விஷயம் எதுவுமில்லை. எல்லா சரீரமும் எல்லா உயிர்களும் இறந்தபின் அணுக்களாகி விடுகின்றன. எந்தச் செயலும் எண்ணமும் அப்போதைக்கப்போது அணுக்களின் அலைகளால் எவரையும் பிரதிபலிக்கக்கூடியதாயிருக்கிறது.

சிறு தண்ணீரை பெரும் நெருப்பு ஐக்கியப் படுத்துவதும், அதிக தண்ணீர் சிறு நெருப்பை ஐக்கியப் படுத்துவதும்போல் தீயசெயல் எண்ணமுடையோர்கள் பெரும்பாலோர் உலகில் இருந்தால், நற்செயல் எண்ணமுடையோர்களுஞ் சிலர் கெட்ட செயலுக்கும் எண்ணத்திற்கும் ஆளாகிருர்கள். நல்ல எண்ணம் நற்செயல் உடையோர்கள் பெரும்பாலோர்கள் உலகில் இருந்தால் தீயசெயல் எண்ணமுடையோர்கள் தன் செயல்களை உணர்ந்து நல்வழிக்காளாகுவார்கள். ஆகையால் மனிதர் உயிருடன் இருக்கும்போது செய்யும் நன்மை பொது மக்களுக்கு பெரும் நன்மையே உண்டாக்கும். இறந்தபின் அவர்களின் நற்செயலின் பிரஸ்தாபத்திற்குத் தக்கவாறு சில காலம் வரையில் உயிருள்ள மக்கள் அவரை ஞாபகிக்கும் எண்ணத்தின் வலுவின் பிரதிபலிப்பால் நலன் தருகிறது.

பத்தாயிரம் மக்கள் கூடிய கூட்டத்தில் ஒரு கவிஞர் பாடும் குரலுக்குத் தக்கபடி அப்போதைக்கு அப்போது சோகம், சாந்தம், கோபம், இரக்கம், வீரம், பேரின்பம் இவைகளின் உணர்ச்சி அங்கு கூடியிருக்கும் எல்லோருக்கும் உண்டாகுவது போல் உலகில் ஒவ்வொருவரும் தமது வாழ்க்கையில் நன்நடத்தையுடன் ஒழுக்கமாகப் பேசி, எண்ணி, வாழ்வதே அவர்களது சொந்த நலத்திற்கும் உலகப் பொது மக்களின் நன்மைக்கும் சிறப்பான உதவியாகும்.

உலக அறிவாளிகளே! உலகத்தில் இதுவரை கடவுள்
(59) உண்டு என்போரும், இல்லை என்போரும்; மோட்சம் நரகம் உண்டு என்போரும், இல்லை என்போரும்; பிறவி உண்டு என்போரும், இல்லை என்போரும் நாளுக்கு நாள் அதிகமாகவே கூடிய போதும் அறிவுக்கு விளக்கமாக அப்பிரச்சனைகள் முடிவடையாது வெறும் நம்பிக்கையுடன் இருந்து வருவதோடு, இப்பிரச்சனையின் முடிவறிவதற்காக உலகத்திலுள்ள பல ஆயிரம் மக்

களுக்குப் பயன்படக் கூடிய சேவையில், இருந்த பெரும் ஆராய்ச்சியாளர்களில் அநேகர் அச்சேவையை விட்டு இப் பிரச்சனையில் ஈடுபட்டார்கள்.

எவ்வித குறைவுமில்லாமல் எல்லாவித சுக அனுபோகத்தில் இருந்தோர்களும், இவைகளுக்கெல்லாம் காரணம் எதுவாய் இருக்கும் என்ற ஆராய்ச்சி ஏற்பட்டவுடன் தன் சுக அனுபோகங்களை எல்லாம் விட்டு விட்டு ஞானம் தேடியோர்கள் வெகு சிலர். தன் உடல் அனுபோகங்களுக்கு கஷ்டங்கள் ஏற்பட்ட போது அதைத் தீர்த்துக் கொள்ள ஞானம் தேடியோர்கள் அநேகர்.

குற்றம் உண்டு என்போரும், அதிக குற்றங்கள் செய்து அவர்களால் மக்களுக்கு அதிக தீங்குகளும்: குற்றமே இல்லை என்போர் சிறு குற்றங்கள் செய்து விட்டாலும், அவர்களின் ஆயுள்வரை அதைப் பெரிதாக தன் எண்ணத்தின் வலுவில் தம்மைக் குறைவாக எண்ணி மன்னிப்பு தேடி மாண்டோர்களும், இதுவரையுள்ள உலக நடை முறையில் இருந்து வருகிறது.

மனிதன்:—மற்ற ஜீவராசிகளுக்கும் மனிதனுக்குமுள்ள வித்தியாசம் என்னவென்ருல் அநேக அனுபோக வாயிலாக நிர்வாகம் செய்வதில் அறிவு யூகம் உயர்ந்தியிருப்பதே மனிதனின் உயர்வாகும். சரீரத்திற்குப் பின் எதற்கும் முடிவு ஒன்றே. இதற்காக வேண்டியே தான் அநேக பிரசங்கங்களில் மனிதனுக்கு மனிதன் என்ற பெயரை மாற்றி **கடவுள்** என்று அமையுங்கள். எல்லா நிர்வாகங்களும் யூகமாகவும் பெருந் தன்மையாகவும் நடக்குமென்றே சொல்லி இருக்கிறேன்.

113110

எல்லோருக்கும் முடிவு ஒன்ருய் இருக்கும் போது அவனவன் செய்யும் செயல் எப்படி இருந்தாலும் ஏன் அதற்கு போதனை வேண்டிய அவசியம்?

MADRAS

ஏனெனில் வைத்தியரும் வியாதியஸ்தரும் சாகாமலிருக்கப் போவதில்லை. உடலிருக்கும் வரை வியாதியில்லா சுகத்துடனிருக்க மருந்தும் வைத்தியரும் அவசியம் போன்று; எல்லோரும் எத்துறையிலும் சீர்திருத்தமாக வாழ்ந்து சிரமத்தை தடுத்துக் கொள்ள வேண்டியதற்கே போதனை.

அன்பு:—உணவு, உடை, தொழில் இடவசதி அறிந்த அனுபவங்களை ஒருவர்க் கொருவர் பங்கிட்டுக் கொள்ளும் தன்மையின் உயர்வின் விளைவே அன்பு.

எண்ணமதின் ஏக்கம்:—சரீர சிரமத்தை போக்கிக் கொள்ள பசி, தூக்கம், போகம் இவைகளே உலக இயல்பின் இயற்கை. இதைத் தவிர்த்து மற்ற எண்ணங்கள் ஏக்கமெல்லாம் நாளடைவில் சேர்க்கையால் சேர்ந்ததேயாகும்.

உலக அறிவாளிகளே! நீங்கள் ஒருவனை நினைத்த மாத்திரத்தில் அவன் வெகு ஆயிர மைலுக்கப்பால் உள்ள துலையில் இருந்தாலும், அவன் அதே க்ஷணத்தில் உங்களை நினைக்கிறான். அதற்குக் காரணம்: எங்கும் நிறைந்து இருக்கும் மனிதனின் (2) நினைப்பின் வியாபகத்தில் தன் எண்ணத்தின் வேகம் (35) நொடிக்கு 20 000 மைலுக்கப்பால் போகக் கூடியதாய் இருக்கிறது. ஆகையால் சொர்க்கம், நரகம், பிறவி, என்னும் அவசியமற்ற போதனைகள் போதித்து வீண்பாரம் உலக மக்கள் எண்ணத்தில் ஊட்டாதபடி, செயலாலும் எண்ணத்தாலும் உள்ள நன்மை தீமைகளை விளக்கமாக அறிவிக்க வேண்டும். அப்போது அவரவர்கள் செய்யும் செயல்களிலும் எண்ணும் எண்ணங்களிலும் அப்போதுக்கு அப்போதே தன்னலத்திற்கும், பொது நலத்திற்கும் எவ்வளவு நன்மை தீமை செய்திருக்கிறோம் என்று அவர்களே உணர்ந்து எல்லோரும் நல்வழிக்குள்ளாவார்கள். அப்படி ஒழுக்கமாக வாழ்ந்து, பேசி, எண்ணுவதற்கு பொது மக்களுக்கு இன்றியமையாத

தேவைக்கு வேண்டிய அளவுக்கு உணவுப் பொருள் அடிப் படையாக அவசியமாகிறது. அதற்கு **விவசாயம்** பெருக வேண்டும்.

பிற்பகல் 4 மணிக்கு மேல் எத் தொழிற்சாலைகளிலும் வேலையில்லா திருப்பதாலும், அதிக வெளிச்ச முள்ள விளக்குகள் இல்லாதிருப்பதாலும் வியாதிகளே ஏற் படாது.

தன் மதப்பற்றுதலை விடாது அறிவை அறிய முற் படுவோர்களின் கதி, ஆடுகளோடு ஒரு வேங்கையைச் சேர்த்து வளர்ப்போன் கதியை போன்றதே.

விவேகம் எதற்கும் எல்லோருக்கும் பயன்படக் கூடி யது. அவ்விவேகத்தால் ஆராய்ந்த போது விவேகியை விட விவேகமில்லா மக்களுக்கு எவ்வித மனப்பான்மையோ எண்ணத்தின் வலிவோ இல்லை.

பறக்கும் பறவை தன் கால்களை கெடுத்துக்கொள்ளா தது போல், பணத்தாலும், படிப்பாலும் அவசிய மற்ற தொழில்களாலும் எல்லோருக்கும் தேவையுள்ள விவசாயத் தை எக்காரணத்தாலும் எக்காலத்தும் கெடுத்துக் கொள்ளாதீர்கள்.

மதங்களின் கருத்து

ஒவ்வொருவரும் தம் சரீரத்தைப் பாதுகாத்துக் கொள்ளவும், தம்மைப்போல் பிறரை நேசிக்கவும் அன்பு சுகாதாரம், கருணை, அறிவின் விளக்கம், சமத்துவம், உண் டாவதற்காக வேண்டியும், அந்தந்த நாட்டு சீதோஷ்ணத் திற்குத் தக்கபடி அறிவு வளர்ச்சி இல்லா மக்களுக்கு வேண்டிய போதனை, கற்பனை, கதைகளோடு உற்சாகப் படுத்தி ஒவ்வொருவரும் நடை, உடை, உணவு, சொல், இருப்பு, படுக்கை, இவைகளில் இருக்கவேண்டிய ஒழுக்கங் களை தொழுகையால், ஜெபத்தால், விரதத்தால், யாத்திரை

யால், பிரார்த்தனையால், யோகத்தால் போதித்ததே மதங்களின் கருத்தாகும். இதை நன்ருய் ஆராய்ந்து பார்த்தீர்களானல் இவற்றின் மூலம் நடைமுறையில் வீட்டில் உள்ள ஒழுக்கம் சுகாதாரம் முதலியவை பயன்பட்டு இருப்பது அறியலாம். இதுவே மதங்களால் ஏற்பட்ட நன்மை இதை அறியாது மத போதனைகளில் ஏற்படும் குழப்பங்களுக்குக் காரணம் என்னவென்ருல், மனித வாழ்க்கைக்கு வேண்டிய அளவுக்கு நிரவிவர உணவு முதலிய அவசியப் பொருள்கள் இல்லாததால் இருக்கும் பொருள்களை சேகரிக்க வேண்டிய கூட்டுறவாளர்களை சேர்த்துக்கொள்ளும் செய்கையே தன் தன் மதம் உயர்வு என்று பேசும் குழப்பம் ஆகும்.

கற்பனை

அந்தந்த சந்தர்ப்பங்களுக்குத் தக்கவாறு கற்பனையை எளிதில் கற்பித்து விடலாம். ஆனல் அந்தக் கற்பனையை கற்பனை யென்றறிய மக்களுக்கு வெகுகால தாமதமும் பிரயாசையும் ஏற்பட்டு விடுகின்றது. கற்பனையோடு ஒட்டி உழைத்து கற்பனையை ஒழிப்போரே வீர விவேகி.

ஆலயம் :—உடல் உழைப்பு களைப்பு நீக்கி நல்ல சிந்தனை ஆராய்ச்சியோடு நிம்மதியாக யிருக்க் வேண்டியதற்குள்ள சுகாதார யிடவசதியே ஆலயம்.

யாத்திரை

ஆராய்ச்சியுடன் அநேக நாடுகளைச் சுற்றிப் பார்ப்பதில் தொழிலுக்கு வேண்டிய சீர்திருத்தங்களும், சமத்துவமும், அன்பும், அறிவு, பெருந்தன்மையும் எதார்த்த துணிவும் இவைகளோடு உலக அனுபவமும் யாவும் கிடைக்கின்றன.

ஆராய்ச்சியில்லாப் பணமுடையோர்செய்யும்யாத்திரையால் அவருக்கு யாதொரு பிரயோஜன மில்லாதிருப்பினும் யாத்திரையில் செலவாகும் பணம் மற்றத் தொழிலாளிகளுக்கு நிரவிவருகின்றது. முயற்சித்தும் தொழில் கிடைக்காத எளியவர்களும் தொழிலே செய்ய இஷ்டமில்

லாத சோம்பேறிகளும் செலவுக்கும் பணமில்லாது செய்யும் யாத்திரையால் பலருக்கும் சிரமத்தை விளைவிக்கின்ருர்கள்.

மூட நம்பிக்கையால் ஆலய சமாதி தரிசனத்துக்குப் பணம் செலவழிக்கக் கூடியவர்கள் செய்யும் யாத்திரையில் அவருக்கும் அவனைப்போன்று விளைவாகும் மக்களுக்கும் அறிவை அடிமைப்படுத்தும் மூட நம்பிக்கையை அதிகரிப்பதோடு ஆலயசமாதியின் மூலமாக சம்பாதிக்கக் கூடியவரிடத்தில் தொழில் முயற்சியில்லாச் சோம்பேறித்தனமும் அறிவுக்கு முறணுன ஏமாற்றத் தந்திரங்களும் விளைவாகின்றன.

உயிர்

அணுக்களின் கூட்டுறவின் வேகமே இரத்தம். இரத்த ஓட்டத்தால் உள்ள ஸ்பரிச உணர்ச்சியின் பிடிப்பே உயிர். தடித்து வளரும் பெரும் மரத்தின் உள் ஈர உணர்ச்சியின் வளர்ச்சிக்குத் தடை ஏற்பட்டவுடன் மரம் எப்படி பட்டு விடுகிறதோ அதுபோல் இரத்த ஓட்டத்தின் வேகம் நின்றுவிட்டால் வேகம், விவேகம், பரிசம், இல்லாது சரீரம் விழுந்து விடுவதற்கு உயிர் இல்லை என்பதாகும்.

இரத்த ஓட்ட வேகத்தாலும் நிதானத்தாலும் சரீர வளர்ச்சியும் தளர்ச்சியும் ஏற்படுவதும் இரத்தஓட்டத்திற்குள்ள தடைகளால் வியாதிகளும் ஏற்படுவதுமாகும்.

நாஸ்திகம் ஆஸ்திகம் :—அறிவுக்கு விளக்கமில்லா நம்பிக்கையுடனும் ஒரே பிடிசாதனையோடும் கடவுளைப்பற்றி பேசுவது ஆஸ்திகம். அதின் தத்துவ ஆராய்ச்சியோடு விளக்கமாய் பேசுவது நாஸ்திகம்.

(1) **நம்பிக்கை** :—தன் அறிவுக்கும் புரியாது எதையும் நம்புவோர்கள் எதிலும் ஏமாறுவார்கள்.

(2) **விசுவாசம்** : — எவ்விஷயமும் அறிவுக்கு விளக்கமாக அறிந்து கொள்வதில் ஏற்படும் நன்றி விசுவாசமாக

என்றென்றைக்கும் மறவாதும் எந்த இடத்திலும் தாம் ஏமாறுதும் பிறரும் ஏமாற்றத்தில் அகப்படாதும் காப்பாற்றும்;

குற்றம்

விவேக மில்லாதார்கள் பெரும் குற்றம் செய்யினும் அது குற்றமே ஆகாது. பெரும்விவேகி ஒரு சிறுகுற்றம் செய்யினும் அது பெரும் குற்றமே ஆகும்.

ஒழுக்கமும் சுகாதாரமும் எல்லோரும் அனுசரிக்க வேண்டியது அவசியம்.

யோகமும் விரதமும்:—அதிக உணவு உண்போர்களுக்கும் சரீர உழைப்பு இல்லாதவர்களுக்கும், வேண்டியது விரதமும் யோகமும். நாள் ஒன்றுக்கு சராசரி 4 மைல் நடையுள்ளவர்களுக்கும் 8 மைல் சைக்களில் பிரயாணம் செய்வோர்களும், நெசவு, மற்ற சரீர உழைப்பு உள்ளோர்களும் யோகம் செய்ய வேண்டியதே இல்லை. வேண்டிய உணவுக்கு கஷ்டப் படுவோர்கள் விரதம் வைக்க வேண்டியதே இல்லை.

விவசாயமும் விவேகமும் கூடுதலாய் இருந்தால் சாதிமத பேதக்குரோதப் பிரிவினைச் சண்டைகள் எந்நாட்டிலும் எப்போதும் இராது.

உலகத்தில் தாவரங்கள் உண்டாகியதிலிருந்து அதை ஜீரணிக்கக் கூடிய ஜீவராசிகள் உண்டாக வெகு காலம் சென்றது. அதிலிருந்து தாவரத்தில் உள்ள உணவையும் மற்ற ஜீவராசிகளையும், ஜீரணிக்கக் கூடிய மனிதன் உண்டாகி மனிதனில் அறிவு உண்டாக வெகுகாலம் சென்றது. இன்று பெருகிக் கொண்டு இருக்கும் மனிதர்களுக்கு, வேண்டிய தாவரமும், மற்ற ஜீவராசிகளும் குறைந்திருப்பதுதான் எல்லா நாடுகளிலுமுள்ள குழப்பத்திற்குக் காரணம். ஆகையால் உலகில் விளைவாகும் உணவுப் பொருளுக்கு வேண்டிய ஜனத் தொகைக்கு மேல் பிறக்க விடாக் (கருவாகுமுன்) கருத்தடை எல்லா நாட்டரசியலிலும் இருக்க வேண்டியது அவசியம். உலகப்பொது

மக்களுக்கு தேவையல்லாத ஒழுக்கத்தைக் கெடுக்கும் பல தொழில்களும் நிறுத்தப்பட்டு அத்திய தொழில்களில் ஈடுபட்டிருப்போரும் இந்த அவசியமான விவசாயமும் மற்றத் தொழிலேயும் பெருக்கப் பாடுபட வேண்டும். இத்துடன் மக்களது மதியை மயக்க சூழ்ச்சியால் தம் ஊதியத்தை உழைப்பின்றி பெறுவோர் தோன்ருது இருக்க பொது மக்களுக்கு தம்மைப்பற்றியும் உண்மை தெரிந்து கொள்ளும் விவேகம், ஆராய்ச்சியைப் பற்றியும் அறிவு ஊட்டுதல் வேண்டும். விவசாயம் பெருக வேண்டும். விவேகம்வளர வேண்டும்.

பெருகும்! வளரும் சந்தோஷம்.

என் இருதய மலர்களே சிறிது பெரிது என்ற பேதக மற்ற நாளுகிய நினேப்பின் நிறைவில் உங்கள் மேல் உள்ள என் அன்பான எண்ணத்தின் அலே எவர்பேரிலும் இல்லாதிருக்க முடியாது. அனுபவத்திற்கு வேண்டிய அறிவுக்காகவும் கால சந்தர்ப்ப பேதங்களில் அகப்படாது காப்பாற்றவும் குருவின் கண்டிப்பு அப்போதுக்கப்போது மிக அவசியம். அதன்பேரில் உங்கள் விசுவாசமும் அவசியமே.

குறிப்பு :-இவற்றில் கண்ட எண்கள் இரண்டாம் பதிப்பு.

"நான்" என்ற நூலில் உள்ள விரிவுரைகளின் வரிசையைக் குறிக்கும்.

எவ்வளவு நூல் ஆராய்ச்சியாளர்களாயினும், எவ்வித யோக அப்பியாசிகளாயினும், இங்கு தன்னிலே விளக்கமும் தன் குண்டலியின் சக்தியால் உணர்வின் பேரின்ப சுகமும் நேரில் வந்து சிரமமின்றி பெற்றுக் கொள்ளவும். உணர்விருந்தால் மரணமில்லே.

ஞான வள்ளல் பரஞ்ஜோதி மஹான் அவர்கள் அருளிய எங் நூலுக்கும் இங் நூலே மூலம் "நான்" என்னும் நூல் தமிழிலும், ஆங்கிலத்திலும் கிடைக்கும்.

உலக சமாதான ஆயலம்,
நெ, 299, திருவெற்றியூர் ஹைரோட்,
புது வண்ணுரப்பேட்டை,
சென்னே 21.

T. S, தேவராஜ்,
காரியதரிசி.

பரிபூரண பரஞ்சோதியின் உயர்ஞான சபைகளின் விலாசம்.

(1) **தலைமை சபை :**—உலக சமாதான ஆலயம் ராம் நாட் ரோடு, (மாரியம்மன் தெப்ப குளம் சமீபம்) மதுரை.

(2) **மத்திய சபை:**—உலக சமாதான ஆலயம். 299, திருவெற்றியூர் ஐரோடு, புதுவண்ணாரப்பேட்டை (டோல் கேட் சமீபம்) மதருஸ்-21.

(3) கீழரத வீதி, சொக்கலிங்க புரம், அருப்புக் கோட்டை.

(4) உலக சமாதான ஆலயம், மதுரை ரோடு, அருப்புக்கோட்டை.

(5) வெள்ளை கோட்டை, அருப்புக் கோட்டை.

(6) தென்கரை, பெரிய குளம்.

(7) சிவன் கோயில் மேல ரத வீதி, பாளையங் கோட்டை.

(8) உலக சமாதன ஆலயம் சின்னாளப்பட்டி, (அம்பாதுரை வழி) சின்னாளப்பட்டி.

(9) 66, தம்பு நாய்க்கன் வீதி, புதுச்சேரி.

(10) C/o S, கிருஷ்ணசாமி நாயுடு, No. 5, B. கவரை வீதி. பெரிய காஞ்சிபுரம்.

(11) உலக சமாதான ஆலயம், 42. பெருமாள் கோயில் வீதி, விழுப்புரம்.

(12) C/o மாங்குடி கிருஷ்ணமூர்த்தி மாங்குடி, (தஞ்சை ஜி)

(13) 88, காட்டன்பெட்மெயின் ரோடு. பெங்களூர் சிட்டி.

(14) C/o ஜ்யார்ஜ் பிரதர்ஸ், 266, டிக்கன்சன் ரோடு, பெங்களூர் தண்டு,

(15) C/o ஹிமாலயா சோடா பாக்டரி, பத்ருவதி, (மைசூர் ஸ்டேட்)

(16) சஞ்சீவிராயன் கோயில் வீதி, கடலூர் ஓ. டி.

(17) M. ராமசந்திரன் தாமரைகுளம் வடக்கு வீதி மன்னார்குடி, மன்னார்குடி போஸ்ட், (தஞ்சை ஜி)

(18) நெ. 4, கங்காதீஸ்வரன் கோயில் வீதி, தோப்புக் கானா, ஆற்காடு, (N. A. Dt)

(19) C/o வைசிய சமாஜம், குப்பம், (சித்தூர் ஜில்லா)

(20) கள்ளிப்பட்டு கிராமம். நீர்வள்ளூர் போஸ்டு, (காஞ்சிபுரம் வழி) (செங்கற்பட்டு ஜி)

(21) 14, மானம் பார்த்த ஜமேதார் வீதி, கொசப் பேட்டை, வேலூர் (N. A. Dt)

(22) C/o ஷண்முகம், கார்கோ இன்ஸ்பெக்டர் (மதுரா கம்பெனி) தனுஷ்கோடி.

(23) C/o பரஞ்சோதிஸ்டோர், பசார் வீதி, வத்ருப்பு, (ராமநாதபுரம்-ஜி)

(24) 2659, ராஜகோபாலசாமி வீதி, தஞ்சாவூர்.

(25) உலக சமாதான ஆலயம், 357, பர்கூசன் ரோடு கொழும்பு-15, சிலோன்.

(26) முல்லிக் கும்மை: வெள்ளை குட்டை போஸ்ட், (வாணியம்பாடி அருகே) (N. A. Dt.)

(27) C/o நடேச முதலியார். வளையாத்தூர் கிராமம், தாமரை பாக்கம் போஸ்ட், (N. A. Dt).

(28) சாத்தம்பாக்கம், ஊமராபாத் போஸ்ட், (ஆம்பூர் வழி) (N. A. Dt.)

(29) S. P. கந்தசாமி (Banker) பாங்கர் பங்களா வீதி, செவ்வாபேட் சேலம்.

(30) C/o V. வெங்கட்ராமய்யர் BALT. பெரிய தெரு, பட்டுக் கோட்டை.

45110

(31) ஒண்டிபுதூர், சிங்க நல்லூர் போஸ்ட். (கோயம் புத்தூர் ஜி)

(32) ரெட்டிமாங்குப்பம், மேல்பட்டி போஸ்ட், குடியாத்தம் தாலுகா (வ. ஆ. ஜி)

(33) S. D. பாலஸ் C/o Dr. K. K. பதி 42, செரங்கூன் ரோடு, சிங்கப்பூர்.

(34) வைரிசெட்டி பாளையம், கொப்பம்பட்டி போஸ்ட் (திருச்சி ஜி)

(35) C/o ஞானபிமானி பிரஸ், காரைக்கால்.

(36) No. 111/112, சத்திரத் தெரு, தூத்துக்குடி

(37) C/o A. N. ராமலிங்க செட்டியார் ஜவுளி வியாபாரம், திருத்துறை பூண்டி, (தஞ்சை ஜி)

(38) 20, போலீஸ் ரங்கசாமி நாயுடு வீதி புத்தூர். (திருச்சி)

(39) சிதாராமையா செட்டி தெரு, பிச்சானூர், குடியாத்தம், போஸ்ட்.

(40)C/o எகாம்பரம், ராமாநந்திர்த் மண்டலி, மட் போர்ட், சிக்கந்தரா பாட், டெக்கான்.

(41) நாகை ஸ்டார் டாக்கி எதிர், நாகப்பட்டிணம்.

(42) சக்கரைப் படித்துரை, கும்பகோணம்.

(43) C/o ஸ்டேஷன் மாஸ்டர், பொள்ளாச்சி.

(44) செங்குங்குட்டை, காட்பாடி.

(45) V. சங்கரன், போலீஸ் கான்ஸ்டேபிள், திருமலை ராஜன் பட்டணம், (ப்ரெஞ்சு இந்தியா)

(46) புதுக்கப்பி ரஸ்தா, விஜயபுரம், திருவாரூர்.

(47) C/o Dr. M. M. சிங். நாட்டரசன் கோட்டை (ராமநாதபுரம் ஜில்லா)

Print Associated By N. P. SAMBANDHAN

113110.